©
**GOVERNMENT OF TAMIL NADU**
**2020**

**MANUSCRIPT SERIES**

**FINANCE (SFC - MC) DEPARTMENT**

**G.O.Ms.No.50, DATED 06th March, 2020**

**(*Vikari, Maasi 23, Thiruvalluvar Aandu, 2051*)**

COMMISSION – Sixth State Finance Commission - To study the financial position of Village Panchayats, Panchayat Union Councils, District Panchayats, Town Panchayats, Municipalities and Municipal Corporations – Constitution of the Sixth State Finance Commission and Terms of Reference – Orders issued - Notified.

---

**ORDER:**

The appended Notification constituting the Sixth State Finance Commission with a Chairman and five other members to study the financial position of Village Panchayats, Panchayat Union Councils, District Panchayats, Town Panchayats, Municipalities and Municipal Corporations and containing the Terms of Reference to the Commission shall be published in an Extraordinary issue of Tamil Nadu Government Gazette, dated: 06.03.2020.

**(By Order of the Governor)**

**K. SHANMUGAM**
**CHIEF SECRETARY TO GOVERNMENT**

To

The Works Manager, Government Central Press, Chennai-79.
(for publication of the Notification)
Thiru Mohan Pyare, I.A.S., (Retd.,) – Chairman,
Sixth State Finance Commission, Chennai.
Thiru C.V. Sekar, Member of Legislative Assembly, Pattukottai Constituency,
Non-official Member, Sixth State Finance Commission, Chennai.
The Director of Rural Development and Panchayat Raj, Panagal Buildings,
No.1, Jeenis Road, Saidapet, Chennai-15.
The Commissioner of Municipal Administration, 11th Floor, Urban Administrative
Building, 75, Santhome High Road, MRC Nagar, R.A. Puram, Chennai-28.
The Director of Town Panchayats, Kuralagam Building, Chennai-08.
All Secretaries to Government, Chennai-9.
All Departments of Secretariat, Chennai-9.
All Commissioners of Municipal Corporations.
The Principal Accountant General (General & Social Sector Audit), Chennai-18.
The Accountant General (A&E), Chennai-18.
The Accountant General (CAB), Chennai-9.
The Director of Local Fund Audit, Chennai-35.

/p.t.o./

All Heads of Departments.
All District Collectors (Except Chennai).
All Assistant Directors of Panchayats.
All Assistant Directors of Town Panchayats.
All Regional Directors of Municipal Administration.
The Secretary to the Hon'ble Governor, Raj Bhavan, Chennai-25.
Secretaries to the Hon'ble Chief Minister, Chennai-9.
The Director of Information and Public Relations, Chennai-9.
The Registrar of High Court, Chennai-104.
Public (Special–A) Department, Chennai-9.
The Legislative Assembly Secretariat, Chennai-9.
Law Department, Secretariat, Chennai-9.
Stock File/ Spare Copies.

/Forwarded by order/

E. Vijayakumar

SECTION OFFICER

## APPENDIX

## NOTIFICATION

In exercise of the powers conferred by clause (1) of Article 243-I and clause (1) of Article 243–Y of the Constitution of India and sub-section (1) of section 198 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) read with the Tamil Nadu State Finance Commission, Chairman and other Members (Conditions of Service) Rules, 1994, sub-section (1) of section 162–A of the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), sub-section (1) of section 124–B of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), sub-section (1) of section 193-A of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), sub-section (1) of section 193–A of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) readwith section 8 of the Tiruchirappalli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 27 of 1994), section 8 of the Tirunelveli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 28 of 1994), section 8 of the Salem City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 29 of 1994), section 8 of the Tiruppur City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 7 of 2008), section 8 of the Erode City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 8 of 2008), section 8 of the Vellore City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 26 of 2008) and section 8 of the Thoothukudi City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 27 of 2008), section 8 of the Thanjavur City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 24 of 2013), section 8 of the Dindigul City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 25 of 2013), section 8 of the Hosur City Municipal Corporation Act, 2019 (Tamil Nadu Act 10 of 2019), section 8 of the Nagercoil City Municipal Corporation Act, 2019 (Tamil Nadu Act 11 of 2019), section 8 of the Avadi City Municipal Corporation Act, 2019 (Tamil Nadu Act 24 of 2019), the Governor of Tamil Nadu hereby constitutes the Sixth State Finance Commission with a Chairman and five other Members as follows:-

| | | | |
|---|---|---|---|
| (1) | Chairman | : | Thiru . Mohan Pyare, I.A.S., (Retd.,) |
| (2) | Non-official Member | : | Thiru. C.V.Sekar, B.A., B.L.,<br>Member of Legislative Assembly,<br>Pattukottai Constituency. |
| (3) | Ex-officio Member | : | Commissioner of Municipal Administration |
| (4) | Ex-officio Member | : | Director of Rural Development and Panchayat Raj |
| (5) | Ex- officio Member | : | Director of Town Panchayats |
| (6) | Member-Secretary | : | Deputy Secretary to Government (Budget),<br>Finance Department. |

2. The period of office of the Chairman and other Members of the Sixth State Finance Commission shall be upto 31st July 2021, from the date on which they respectively assume charges.

/p.t.o/

3. The Commission shall review the financial position of the rural and urban local bodies namely Village Panchayats, Panchayat Union Councils, District Panchayats, Town Panchayats, Municipalities and Municipal Corporations and make recommendations as to:-

(a) the principles which should govern –

   (i) the distribution between the State and the said local bodies of the net proceeds of the taxes, duties, tolls and fees leviable by the State, which may be divided between them and the allocation between the said local bodies of their respective shares of such proceeds;

   (ii) the determination of taxes, duties, tolls and fees which may be assigned to, or appropriated by, the local bodies;

   (iii) the grants-in-aid to the local bodies from the Consolidated Fund of the State;

(b) the measures needed to improve the financial position of the local bodies and identifying new avenues for resources mobilization in rural and urban local bodies keeping in mind the local body tax structure in other States.

(c) suggesting ways to avoid mounting of unpaid bills of electricity charges to Tamilnadu Generation and Distribution Corporation (TANGEDCO) and water charges to Tamil Nadu Water Supply & Drainage Board (TWAD)/ Chennai Metropolitan Water Supply and Sewerage Board (CMWSSB) and other bulk water providers and to ensure prompt and timely settlement of charges to these utilities.

(d) suggesting ways for strengthening the service delivery capacities of Local body administration to enable them to effectively discharge the roles and responsibilities entrusted to them in the Constitution of India and the State Legislations.

(e) examining the possibility of providing devolution to Cantonment Boards from out of the Consolidated Fund of the State.

4. The Commission shall review the financial position of the local bodies as on 31st March 2020 based on the present reorganized status of local bodies.

5. In making its recommendations, the Commission shall have regard to the resources of the State Government, the demands thereon, in particular the expenditure of the State on pension and debt servicing, including the debt servicing on behalf of local bodies or other committed expenditure or liabilities of the State Government and the need to generate adequate surplus on revenue account for State's commitments on capital account and other commitments of the State Government.

6. The Commission shall make its report available by 31st July 2021 covering the period of five years commencing on 1st April 2022.

**06 March, 2020**
**Chennai.**

**Banwarilal Purohit**
**Governor of Tamil Nadu**

/True Copy/

E. Vijayakumar

SECTION OFFICER

# இணைப்பு

## அறிவிக்கை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243–I பிரிவைச் சேர்ந்த (1) பகுதியிலும் 243–Y பிரிவைச் சேர்ந்த (1) பகுதியிலும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 198 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் (பணி விதிகள்) விதிகளுடன், 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 162–A பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 124–B பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும் 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 193–A பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 193–A பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 8–ஆம் பிரிவிலும், 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 8–ஆம் பிரிவிலும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 8–ஆம் பிரிவிலும் 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 8–ஆம் பிரிவிலும், 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 8–ஆம் பிரிவிலும், 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 8–ஆம் பிரிவிலும் மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 8–ஆம் பிரிவிலும் 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2013) 8–ஆம் பிரிவிலும், 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/2013) 8–ஆம் பிரிவிலும், 2019 ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/2019) 8–ஆம் பிரிவிலும், 2019 ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/2019) 8–ஆம் பிரிவிலும் மற்றும் 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2019) 8–ஆம் பிரிவிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 6வது மாநில நிதி ஆணையத்தை அதன் தலைவர் மற்றும் ஏனைய ஐந்து உறுப்பினர்களுடன் அமைத்து பின்வருமாறு ஆணையிடுகிறார்:–

| | | | |
|---|---|---|---|
| (1) | தலைவர் | : | திரு.மோகன் பியாரே, இ.ஆ.ப., (ஓய்வு) |
| (2) | அலுவல் சாரா உறுப்பினர் | : | திரு. சி.வெ.சேகர், பி.ஏ., பி.எல்.,<br>சட்டமன்ற உறுப்பினர், பட்டுக்கோட்டை தொகுதி. |
| (3) | உறுப்பினர் (அலுவலால்) | : | நகராட்சி நிர்வாக ஆணையர் |
| (4) | உறுப்பினர் (அலுவலால்) | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் |
| (5) | உறுப்பினர் (அலுவலால்) | : | பேரூராட்சிகளின் இயக்குநர் |
| (6) | உறுப்பினர்–செயலர் | : | அரசு துணைச்செயலாளர்(வரவு–செலவு),<br>நிதித்துறை. |

**2.** ஆறாவது நிதி ஆணையத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்களின் பதவிக்கால அளவு முறையே அவரவர் பதவிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து 2021 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ஆம் நாள் வரையில் இருக்கும்.

**3.** இந்த ஆணையம், ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின், அதாவது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை ஆய்வு செய்து பின்வருபவை குறித்து பரிந்துரை செய்ய வேண்டும் :–

/.த.பி.பா./

(அ) கீழ்கண்டவற்றை நிர்ணயிக்கும் கொள்கைகள் –

(i) மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை மாநில அரசுக்கும் மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளுதல், அத்தகைய வருவாயில் மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அவற்றிற்குரிய பங்குகளை முறையே பிரித்தளித்தல்;

(ii) மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படக்கூடிய அல்லது அவைகளே தக்கவைத்துக் கொள்ளக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றைத் தீர்மானித்தல்;

(iii) மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி மானியங்கள்;

(ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் ஏனைய மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வரிவீத அமைப்பைக் கருத்தில் கொண்டு, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளில் நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கான புதிய வாய்ப்புகளை கண்டறிதல்.

(இ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்படாத மின்சார கட்டணங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் / சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் பிற மொத்த நீர் வழங்குநர்களுக்கு செலுத்தப்படாத நீர் கட்டணங்கள் அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்கான வழிகளை பரிந்துரைத்தல் மற்றும் இந்த பயன்பாடுகளுக்கான கட்டணங்களை உடனடியாகவும், சரியான நேரத்திலும் தீர்ப்பதை உறுதிசெய்தல்.

(ஈ) இந்திய அரசியலமைப்பு சாசனம் மற்றும் மாநில சட்ட மன்றங்களினால் கொடுக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி அமைப்பு நிர்வாகத்தின் சேவை வழங்கல் திறன்களை வலுப்படுத்துவதற்கான வழிகளை பரிந்துரைத்தல்.

(உ) மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து கன்டோன்மென்ட் கழகத்திற்கு நிதிப்பகிர்வு வழங்குவதற்கான சாத்தியத்தை ஆராய்தல்.

**4.** திருத்தியமைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு ஆணையம் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மார்ச் 31, 2020ல் உள்ளவாறு மதிப்பீடு செய்ய வேண்டும்.

**5.** ஆணையம், தனது பரிந்துரைகளை அளிக்கும் போது, மாநில அரசின் நிதி ஆதாரங்கள், அவற்றின் மீதான தேவைகள், குறிப்பாக மாநில அரசின் ஓய்வூதியச் செலவு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாக கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் உள்ளிட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பான செலவு அல்லது இதர பொறுப்பேற்ற செலவுகள் அல்லது மாநில அரசின் செலவுப் பொறுப்புகள் மற்றும் மூலதன கணக்கில் செலவு பொறுப்புகள் மற்றும் மாநில அரசின் இதர பொறுப்புகள் முதலியவற்றிற்குத் தேவையான அளவிற்கு வருவாய்க் கணக்கில் உபரியை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஆகியனவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**6.** 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுகளுக்குப் பொருந்தும் வகையில் ஆணையம், 2021 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ஆம் தேதிக்குள் தனது அறிக்கையை அளித்திட வேண்டும்.

மார்ச் 6, 2020
சென்னை.

**பன்வாரிலால் புரோகித்**
தமிழ்நாடு ஆளுநர்

/ உண்மை நகல் /

E. Vijayakumar

பிரிவு அலுவலர்